**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–14 ஆம் ஆண்டிற்கு பார்வைத்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒளிரும் மடக்கு குச்சிகள் வாங்கி வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.03

நாள்: 12–02–2014
விஜய, தை 30,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.92, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 16–07–2012.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3374/இவாததி1/ 2013, நாள் 08.2013 மற்றும் நாள் 20.12.13.
3. அரசாணை(நிலை) எண்.97, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 20–11–2013.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இரவில் சிரமமின்றி நடப்பதற்கு உதவியாக, ஒளிரும் மடக்கு குச்சிகளை, நடைமுறையில் உள்ள விதிகளை பின்பற்றி 2012–13 ஆம் ஆண்டிற்கு 5000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. தற்போது, மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேற்படி அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில், 2012–13 ஆம் நிதியாண்டில் பார்வைத்திறன் குறையுடைய 6289 மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு குச்சிகள் ரூ.9,99,951/– மதிப்பில் வாங்கி வழங்கப்பட்டது என்றும், இத்திட்டம் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும், மேலும் இத்திட்டத்தினை தொடர் திட்டமாக செயல்படுத்தப்படும் பட்சத்தில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், எனவே, 2013–14 அம் நிதியாண்டில் இதனை தொடர் திட்டமாக செயல்படுத்திட அனுமதியும் ஒளிரும் மடக்கு குச்சி ஒன்றின் விலை ரூ.200/– வீதம் 1500 பயனாளிகளுக்கு வாங்குவதற்கென ரூ.3,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறும், ஒளிரும் மடக்கு குச்சிகள், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதி வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இதனிடையில், மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், இலவச உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–14ம் நிதியாண்டில் காதொலி கருவிகள் தவிர, ஏனைய உபகரணங்கள் வாங்கி வழங்கிட ரூ.61,08,150/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு மேலே, மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையுடன் கூட பரிசீலிக்கப்பட்டது. இலவச உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாகலாகாது என்ற நிபந்தனையின் பேரில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இரவிலும் சிரமமின்றி நடப்பதற்கு உதவியாக ஒளிரும் மடக்கு குச்சிகளை, நடைமுறையில் உள்ள விதிகளை பின்பற்றி 2013–14 ஆம் ஆண்டிற்கு பின்வருமாறு வாங்கி வழங்கிட ரூ.38,000/– (ரூபாய் முப்பதெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

| வ.எண். | உபகரணத்தின் வகை | ஒன்றின் தோராய விலை | பயனாளிகள் இலக்கு | மொத்த தொகை ரூ. | வாங்கும் முறை |
|---|---|---|---|---|---|
| 1. | ஒளிரும் மடக்கு குச்சிகள் | ரூ.200/– | 190 | ரூ.38,000/– | தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன் படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் |
| மொத்தம் | | | 190 | ரூ.38,000/– | |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235– சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம் – JH – மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் –24 பொருட்களும் வழங்குதலும்".
(து.தொ.கு.2235–02–101–JH–2404)

5. ஒளிரும் மடக்கு குச்சிகளை மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள தோராய விலைக்குள் மட்டுமே தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி கொள்முதல் செய்திட அனுமதியளிக்கப்படுகிறது.

i. ஒளிரும் மடக்கு குச்சிகள், உத்தேச செலவு தொகையைவிட விலை அதிகமிருப்பின், நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்குள்ளும், விலை குறைவாக இருப்பின், அதற்கு தகுந்தாற்போல் ஒளிரும் மடக்கு குச்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்து வாங்கி வழங்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.6213/நிதி(சந)/14, நாள்10.02.14ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.

<u>நகல்:–</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.